தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1971 ஜூன் 26.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண்கள் 56-ம், 57-ம் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது கேள்வி எண்கள் 58-ம், 59-ம் சேர்ந்தாற்போல் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

Panchayat Administration

*58 Q.—THIRU N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal to reorganise the Panchayat Administration?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தற்பொழுது ஊராட்சி வளர்ச்சித் துறையை மாவட்ட அளவிலும் கோட்ட அளவிலும் திருத்தியமைக்கும் செயற்குறிப்புதான் அரசின் பரிசீலனையிலுள்ளது. நிர்வாக சீர்திருத்தக் குழு, ஊராட்சி வளர்ச்சித்துறையைத் திருத்தி அமைப்பதற்கான பரிந்துரைகளைச் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

*59 Q.—THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the stage at which the question of formation of a separate Department for the Panchayat Development wing stands?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்பிரச்சனை நிர்வாக சீர்திருத்த குழுவின் கருத்திற்கு வைக்கப்படுகிறது.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, உள்ளாட்சி நிர்வாகம், மாநில அளவில் எப்படி வருவாய்த் துறை அலுவலகம், பொதுச் சுகாதாரத் துறை அலுவலகம் ஆகிய துறைகள் தனித் தனியாக இயங்குகின்றனவோ அதைப்போல உள்ளாட்சி நிர்வாகம் தனியாக இயங்கவேண்டும் என்று நீண்ட நாட்களாகக் கேட்கப் பட்டு அதற்கென்று திரு. முருகேச முதலியார் குழு ஒன்று அமைத் தோம். அக்குழுவின் அறிக்கை சர்க்காருக்குக் கிடைத்தும் இன்னும் இந்த இலாகாவைத் தனியாகப் பிரிக்காமலிருப்பதற்குக் காரணம் என்ன?